## ஸௌராஷ்ட்ர எழுத்தின் சிறப்பு

– D.R. ஜெயராமன், மதுரை.

மொழியும் அதற்குரிய எழுத்தும் எப்போது தோன்றியது ? அவைகளை மனித குலத்திற்கென கடவுள் நேரடியாக வந்து அளித்தாரா எனில் இல்லை. மனிதகுலம் பேசப்பழகுவதற்கு முன்னர். அந்தந்த இடங்களில் கிடைத்த எழுது கருவிகளைக் கொண்டு சித்திர வடிவ வாயிலாகத் தங்கள் கருத்தைப் பிறருக்கு உணர்த்தியுள்ளனர். கொஞ்சம் கொஞ்சமாக பேச்சு முறை வந்து வளர்ந்து மொழி உண்டான பின்பு ஓவிய வடிவங்கள் சுருங்கி எழுத்து முறை உருவாயிற்று.

மனித குலம் ஆங்காங்கே வாழ்ந்த இயற்கை சூழலுக்கு ஏற்ப மொழியின் ஒலி வடிவங்களும் ஒலி வடிவங்களுக்கேற்ப வரிவடிவங்களும் அமையப்பெற்றன. அந்த வரிவடிவங்களும் கொஞ்சம் கொஞ்சமாக மாறுதலடைந்து செம்மைப்படுத்தப் பெற்றன. எந்த ஒரு எழுத்து முறையும் காலதேச வர்த்தமானப் பிரகாரம் மாறுதல் அடையும் என்பது அறிஞர்களின் கருத்து.

தமிழ்மொழி 2000 ஆண்டுகள் பழமையானது. அம்மொழி துவக்கத்தில் பிராம்மி எழுத்துகளால் எழுதப்பட்டது. பின் வட்டெழுத்துகளால் எழுதப்பட்டு வந்தது. சோழர்கள் காலத்தில் அதாவது கி.பி. 13, 14ஆம் நூற்றாண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய வரிவடிவத்தில் தமிழ் இப்பொழுது எழுதப்படுகிறது. எகார, ஒகார நெடில் உயிர்கள் அதனதன் எழுத்தின் மேல் புள்ளியிட்டு காட்டப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் முற் பகுதியில் வீரமாமுனிவர் எனப் பெயர் பூண்ட கார்டுவெல்போப் தான் ஏகார ஓகார உயிர் எழுத்துகளுக்கு தற்போதுள்ள தனிவரிவடிவத்தை உண்டாக்கினார். இவ்வளவு ஏன், ஈ.வே.ரா. பெரியார்தான் ணா, றா, னா, ணை, லை, ளை, னை

லோகும் கொ$^{3}$வ்ளொ ஸொகந் தே$^{3}$வு
லைடொ$^{3}$ கள்யவ்ந ரக்ஷ்வெநு
ப$^{4}$க்துநுக் மதிமெக்$^{3}$ தே$^{3}$ஸூ
ரக்ஷூல்நொ தெகஹால்தெநு

இடையன் கால்நடைகளை தன்னுடன் கூட்டிக் கொண்டு அவைகளுக்கு மேய்ச்சல் நிலத்தைக் காண்பிப்பது போல, கடவுள் மனிதர்களுக்கு நேரடியாக உதவிகளைச் செய்வதில்லை. மனிதர்களுக்கு தெளிந்த அறிவைத் தந்திருக்கிறார். அந்த அறிவைக் கொண்டு மனிதர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

தை$^{3}$வத்தநொண்ட்யேஸ் பு$^{2}$ர்ந
மெநிக்யத்தந் மிளிந் ஹொநொ
தி$^{3}$ய்யொ மிள்நாத்தொ காமஸ்கொ
ஹோநகை பூர்தி ஸத்தம

கடவுள் மனிதனுக்கு நல்லவை செய்ய வேண்டும் என உறுதி பூணுகிறது. கடவுளது எண்ணத்தை நிறைவேற்ற மனிதனும் முயற்சிக்க வேண்டும். கடவுளின் அருள், மனிதனின் முயற்சி ஆகிய இரண்டும் சேராமல் எந்தவித செயலும் முழுமை அடையாது.

தை$^{3}$வத்தநவி நல்லாநும்
மிளைமெநி ஸூதி$^{3}$ந் ஸதா$^{3}$
ஹட்விலிந் கோ$^{3}$ மெநிக்யத்தந்
கெர்லஸூந் கரெ ஹோத்திஸொ.

கடவுளின் அருள்பெற வேண்டு–மெனில் விடாமுயற்சி வேண்டும் என்பதை நன்கு அறிந்த அறிஞர் உணர்வர். அவ்வாறே விடாமுயற்சி செய்து அறிஞர்கள் கடவுளின் அருளைப்பெற்று தங்கள் இலக்கை அடைவர் என்பது உறுதி.

மேதாவி தொ.மு.ராமராய் அவர்கள் இயற்றிய ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு நூலின் முதல் மூன்று சுலோகங்களில் உள்ளவைதான் மேலே குறிப்பிட்டப் பட்டுள்ளவை.

வரிவடிவங்களை ணா, றா, னா, ணை, லை, ளை, னை என சீர்திருத்தி அமைத்து வழிகாட்டி மாற்றியுள்ளார்.

எழுத்தச்சன் உருவாக்கிய மலையாள வரிவடிவ எழுத்தில் உகர மற்றும் ஊகார எழுத்துகளுக்கு தற்போது தமிழில் உள்ளவை போன்ற தனி வரிவடிங்கள் இருந்தன. ஆனால் இப்பொழுது உகர மற்றும் ஊகராங்களுக்கு தனித்துணைக் குறிகள் உருவாக்கப்பட்டு மலையாள மொழி எழுதப்படுகிறது.

ஆங்கில மொழி கையெழுத்திற்கென ஒருவித எழுதுமுறையும் அச்சு எழுத்திற்கென வேறு ஒருவித எழுதுமுறையும் கொண்டது. அந்த ஆங்கிலமும் கணினியின் பயன்பாட்டிற்காக தற்போது பல்வேறு வடிவமாற்றங்களுடன் பயன்படுத்தப் பெறுவதை அனைவரும் அறிவர்.

அச்சு, தட்டச்சு மற்றும் கணினி பயன்பாட்டிற்கு ஏற்ப எழுதும் முறையில் 'நாகரி'யும் மாற்றங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. கை கொண்டு வாகாக எழுதப்பட்ட நாகரி கூட்டெழுத்துக்களின் மெய்யெழுத்துக்கள் தனி மெய்யெழுத்துகளாக தற்சமயம் எழுதப்படுகின்றன என்பதை நாகரியை நன்கு அறிந்தோர்க்குத் தெரியும்.

இந்திய மொழிகளில் அச்சில் ஏற்றப்பட்ட முதல் மொழி தமிழ் மொழியே. நாகரி, குஜராதி, பஞ்சாபி, வங்காளி, ஒரியா, கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் உள்ள கூட்டெழுத்து முறையைக் கொண்டிராமல் தமிழ் தனித்தனி எழுத்துகளைக் கொண்டு எழுதப்பட்டு வந்ததே இதற்கு காரணம் எனக் கொள்ளலாம்.

தமிழ், மலையாளம், ரோமன், நாகரி எழுத்துகளைப் போன்றே தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப சீர்திருத்தம் பெற்றுள்ளதைப் போலவே ஸௌராஷ்ட்ர எழுத்தும் காலத்திற்கேற்ப சீர்த்திரு–த்தங்கள் அடைந்துள்ளன.

ஜக$^{3}$து ஸரபாடி சல்லந் ஜு$^{2}$கு ஸிக்கிந்
ஸிக்குநாந் ஞான்நீ:த் தெநு

– ஸங்குராம்

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்

– வள்ளுவர்

சென்னை கிறிஸ்துவக் கல்லூரியில் ஸம்ஸ்க்ருத பேராசிரியராக பணியாற்றிய பண்டித சதுர்வேதி லக்ஷ்மணாசாரியாரால் 1876–ல் ஸௌராஷ்ட்ர அக்ஷராவளி, ஸௌராஷ்ட்ர வத்தாவளி, ஸௌராஷ்ட்ர ஸப்தா$^{3}$வளி மற்றும் ஸௌராஷ்ட்ர லகு$^{2}$ ஸங்க்$^{2}$யாவளி என்ற நான்கு புத்தகங்கள் இயற்றப்பட்டு சென்னை ஸௌராஷ்ட்ர சமாஜத்தினரால் வெளியிடப்பட்டன. ஸௌராஷ்ட்ர மொழிக்கென முதன்முதலாக எழுத்தினை கண்ட ஸௌராஷ்ட்ர லிபி பிதாமகன் இவர் தான். இவர் உருவாக்கிய எழுத்துமுறை கையினால் மட்டுமே எழுதுவதற்கான வாகைக் (System) கொண்டது. மேலும் இந்நான்கு புத்தகங்களும் லித்தோகிராப் முறையில் அச்சடிக்கப்பட்ட புத்தகமாகும். இருட்டறையில் உள்ள ஒருவர் தன்முகத்தை தானே காண இயலாத நிலையில், நல்லவெளிச்சத்தில் கண்ணாடி கிடைத்து தன் முகத்தை தானும், பிறரும் காணும் முகமாக பண்டித சதுர்வேதி லக்ஷ்மணாசாரியார் ஸௌராஷ்ட்ர லிபியை உருவாக்கிக் கொடுத்துள்ளார் என அக்ஷராவளி புத்தகத்தின் வாயிலாக அன்னார் சென்னை ஸௌராஷ்ட்ர சமாஜத்தினரால் பாராட்டப் பெறுகிறார்.

– தொடரும்

மதுரை மாநகரில்
சிறந்த ஆடியோ கேசட், CD நிறுவனம்
கீஷ்டு கானம்
★ E-29, 30, ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்,
பெரியார் பஸ் ஸ்டாண்ட், மதுரை–1. Ph : 2338866
★ 60, டவுண் ஹால் ரோடு, மதுரை–1. Ph : 2340005
★ சங்கீத் பிளாசா, கோரிப்பாளையம்,
மதுரை–2. Ph : 2532211

கீஷ்டு கானம் & பாதம்
அனைத்து கம்பெனி காலணிகள்
இரண்டாயிரம் சதுர அடி பரப்பளவில் நீண்ட
காலத்திற்கு உழைத்திடும் (ஹவாய், சப்பல்ஸ், ஷூஸ்,
LIBERTY Action Bata
6, கான்சா மேட்டுத்தெரு, நகைகடை பஜார்,
Opp. தங்கமயில் ஜுவல்லரி, மதுரை. Ph : 2348866
ஞாயிறு கடை உண்டு கிரிடிட் கார்டு வசதி உண்டு